DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 289 / 2015 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 8 |
| Name | திருமதி.புஷ்பராணி |
| Husband Name | அருள்சேக் முகமது |
| Village | மதுரை |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 50 |

**(எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 22-05-2026.(நேரம்: 01.15 PM)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் வீட்டில்குடித்தனம் செய்து வருகிறேன்.

3. இவ்வழக்கில் இறந்து போன அருள்சேக்முகமது எனது கணவர் ஆவார் மற்றும் இறந்து போன சலாவுதின் எனது கணவரின் நண்பர் ஆவார்.

4. இவ்வழக்கின் எதிரியை எனக்கு தெரியாது.

5. 2012 ம் ஆண்டு ஒரு நாள் எனது கணவர் அருள் சேக்முகமது என்பவருக்கு விபத்து ஏற்பட்டு இறந்து விட்டதாக எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள்.

6. எனது கணவரை தூத்துக்குடி  அரசு மருத்துவமனையிலிருந்து மருரை ராஜாஜி மருத்துவமைக்கு கொண்டு போக சொன்னார்கள், அவர் மதுரை ராஜாஜி மருங்ததுமனையில் சிகிச்சை பலனின்றி இறந்து போனார்.

7. பிரேத விசாரணையின் போது நான் உடன் இருந்தேன்.

8. போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக என்னை விசாரரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. சம்பவம் பற்றி எனக்கு நேரடிடியாக தெரியாது என்றால் சரிதான்.

2. என் கணவர் சம்பவத்தின் போது மது அருந்தியிருந்தாரா என்பது எனக்கு தெரியாது. நண்பருடன் சேர்ந்திருக்கும்போது மது அருந்துவார்.

3. போலிசார் என்னை எத்தனை தடைவை விசாரித்தார்கள் என்றால் ஒரு முறை விசாரித்தார்கள்.

4. என்னை விசாரித்தபோலிசார் தரநிலை தெரியுமா என்றால் தெரியாது.

5. எதிரியை பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால்எனக்கு தெரியாது.

6. சம்பவம் எப்போது நடைபெற்றது என்ற விவரம் தேரியுமா என்றால் தெரியாது.

7. இந்த வழக்கில் என் கணவரின் இறப்பிற்காகா விபத்து இழப்பீடு கோரி தகுந்த நீதிமன்றத்தில் இழப்பீட பெற்றுள்ளேனா என்றால் ஆம் பெற்றுள்ளேன்.

8. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 289 / 2015 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 9 |
| Name | திரு.ஆரோக்கியம் |
| Father Name | சூசை |
| Village | மதுரை |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 69 |

**(எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 22-05-2026.(நேரம்: 01.25 PM )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் கூலி வேலை செய்து வருகிறேன்.
3. அசா 8 எனது மகள் ஆவார்.
4. இவ்வழக்கில் இறந்து போன அருள்சேக்முகமது எனது மருமகன் ஆவார் மற்றும் இறந்து போன சலாவுதின் பற்றி எனக்கு தெரியாது.
5. இவ்வழக்கின் எதிரியை எனக்கு தெரியாது.
6. 2012 ம் ஆண்டு ஒரு நாள் எனதுமருமகன் அருள் சேக்முகமது ஆட்டோவில்சென்றதாகவும் அதில் விபத்து ஏற்பட்டதாகவும் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள். நான் கேள்விப்பட்டு மதுரை ஜவஹர் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது மருத்துவமையில் இறந்து விட்டதாக சொன்னார்கள்.
7. பிரேத விசாரணையின் போது நான் உடன் இருந்தேன்.

8. போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக என்னை விசாரரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் எதிரியை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

2. சம்பவ நேரம் பற்றி எனக்கு எதுவும் தேரியாது என்றால் சரிதான்.

3. விபத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் வாகனத்தின் நிறம், பதிவு எண் குறித்த விவரங்கள் தெரியாது என்றால் சரிதான்.

4. பிரேத விசாரணை எவ்வளவு நேரம் நடந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

5. மருமகனை மருத்துவமைக்கு கொண்டு சென்றது தனியார் ஆம்புலன்சா அல்லது அரசு ஆம்புன்சா என்பது தேரியாது.

6. என்னை விசாரித்த கோலிசார் தரநிலை தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது.

7. இந்த வழக்கில் இறந்துபோனது என் மருமகன் என்பதால் அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8. எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வண்டியை ஓட்டியதாக கேள்விப்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.